செ.வெ.எண்: 61 / 2019 நாள்: 28.09.2019

<u>பத்திரிக்கை செய்தி</u>

# மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குலுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் திருப்பூர்

# மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!

- தொடர்ந்து மக்காச்சோளம் பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். பயிர் சுழற்சி முறையை பின்பற்ற வேண்டும்.
- வயலை ஆழமாக உழுது மண்ணில் உள்ள கூட்டு புழுக்களை வெளியேற்றி அழிக்கலாம்.
- வேப்பம் பிண்ணாக்கு ஏக்கருக்கு 100 கிலோ அளவில் இடுவதால் மண்ணில் உள்ள கூட்டுபுழுவை அழிக்கலாம்.
- சரியான இடைவெளியில் மக்காச்சோளம் பயிரிட வேண்டும். மானாவாரியில் 45X20 செமீ மற்றும் பாசன பகுதிகளில் 60X25 செமீ இடைவெளி இருக்குமாறு பயிரிடுவதன் மூலம் புழுக்களின் நடமாட்டத்தை குறைக்கலாம்.
- பெவெரியா 10 கிராம அல்லது இமிடாகுளோபிரிட் 10 கிராம் அல்லது தயோமீத்தாக்ஸம் 10 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து நேர்த்தி செய்ய வேண்டும்.
- விளக்குப்பொறி ஒன்றை ஒரு ஹெக்டேர் பரப்பில் வைத்து அந்துப்பூச்சிகளை கண்காணிக்க வேண்டும். விளக்குப் பொறியின் கீழ் ஒரு கலனில் தண்ணீருடன் மண்ணெண்னை கலந்து வைப்பதன் மூலம் அந்து பூச்சிகள் அதில் விழுந்து இறந்து விடும்.
- வரப்பு பயிராக சோளம், தட்டை பயறு, சூரியகாந்தி, சாமந்தி, மரவள்ளி ஆகியவற்றை பயிரிட்டு இந்த பூச்சிகளின் எண்ணிக்கையை குறைக்கலாம்.
- முட்டைக்குவியல்கள் மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும்.
- மெட்டாரைசியம் பூஞ்சான கலவையை ஒரு ஏக்கருக்கு 400 கிராம் அல்லது 400 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள மருந்துகளில் ஏதேனும் ஒன்றை கைத்தெளிப்பான் மூலம் தெளித்து மக்காச்சோள படைப்புழுவை கட்டுப்படுத்தலாம் (ஒரு லிட்டர் நீருக்கு) அசாடிராக்டின் 1 இசி - 2 மில்லி (அ) தயோடிகார்ப் 75 டபிள்யு பி - 2 கிராம் (அ) எமாமக்டின் பென்சோயேட் 5 எஸ்ஜி - 0.4 கிராம் (அ) ஸ்பைநோசட் 45 எஸ்சி 3 மிலி - 0.5 மில்லி
- பூச்சி கொல்லி மருந்து தெளிக்கும் போது தொடர்ந்து ஒரே வகையான மருந்தை தெளிக்க கூடாது.
- பூச்சி மருந்து தெளிக்கும் போது மருந்து மக்காச்சோள பயிரின் குருத்துப்பகுதியில் படுமாறு தெளிக்க வேண்டும்.

எனவே, மேற்கண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாண்டு படைப்புழுவினை கட்டுப்படுத்துமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**